பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 11 செவ்வாய்க்கிழமை 27.07.2021 கதிர் 130

## வவுனியா பல்கலையின் முதலாவது வேந்தராக மோகனதாஸ் நியமனம்



(இ.கலையமுதன்)

வவுனியா பல்கலைக் கழகத்தின் முதலாவது வேந்தராக பேராசிரியர் சுப் பிரமணியம் மோகனதாஸ் நியமனம் செய்யப்பட் டுள்ளார்.

☞2

# வடக்கு, கிழக்குக்கு 16 இலட்சம் தடுப்பூசிகள் அன்பளிப்பாக இன்று வழங்கியது சீன அரசு

## ஜனாதிபதி மாளிகையில் வைத்து டக்ளஸிடம் கையளிப்பு



(இ.கலையமுதன்)

இலங்கைக்குச் சீனாவால் அன்பளிப்பாக இன்று வழங்கப்பட்ட 16 இலட்சம் 'சினோபோர்ம்' கொரோனாத் தடுப்பூசிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மாளிகையில் இன்று நடைபெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கைக்கான சீனத் தூதுவர் கியூய் ஜென்ஹொங் ஆகியோர் தடுப்பூசிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தனர்.

☞2

## கரவெட்டி புதிய கொத்தணி; மத்தொனி கிராமம் முடக்கம்

யாழ்., வடமராட்சி, கரவெட்டி பிரதேசத்தில் ஒரு பகுதி இன்று அதிகாலை முதல் தனிமைப்படுத் தப்பட்டுள்ளது.

கரவெட்டி தெற்கில் ஆலய திருவிழா நிகழ்வு ஒன்றில் பங்கேற்றிருந்த 49 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே கரவெட்டி தெற்கில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பகுதியான மத்தொனி கிராம சேவகர் பிரிவு (ஜே/366) சமூக முடக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த ஆலயத் திருவிழாவில் பங்கேற்றவர்களுக்கு பிரசாதம் வழங்கியவர் நோய் அறிகுறிகளுடன் காணப்பட்டார் என்று விசாரணைகளில் தெரியவந்திருக்கின்றது எனச் சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## பருத்தித்துறையில் மேலும் 11 பேருக்குக் கொரோனா!

யாழ்., வடமராட்சி, பருத்தித்துறை நகர் உள்ளிட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு இன்று முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் 11 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

395 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையிலேயே 11 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

அவர்களில் மீன்சந்தை வியாபாரிகள் இருவரும், ஓட்டோ சாரதிகள் இருவரும், தனியார் பஸ் சேவை ஊழியர் ஒருவரும், வெதுப்பகம், வர்த்தக நிலையம் ஊழியர்கள் தலா ஒருவரும் மற்றும் மீனவ சங்கப் பிரதி ஒருவரும் அடங்குகின்றனர்.

பருத்தித்துறை நகர அண்டி மருந்தகங்கள் உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் வங்கிகள் திறக்கப்படுகின்றன.

பருத்தித்துறை நகரில் இருந்த பஸ் தரிப்பிடம் மூடப்பட்டுள்ளதால் டிப்போ சந்தியிலிருந்து பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன.

## ஹிஷாலினிக்கு நீதி வேண்டி யாழ்ப்பாணத்தில் போராட்டம்



(இ.கலையமுதன்)

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த டயகமவைச் சேர்ந்த 16 வயது சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம்

☞2

## நாவற்குழியில் பூசகர் மாயம்!

### மூன்று மாதங்களாகத் தேடும் மனைவி



(இ.கலையமுதன்)

யாழ். நாவற்குழிப் பகுதியில் உள்ள தான்தோன்றி ஞானவைரவர் ஆலய தர்மகர்த்தாவும், ஆலயப் பூசகருமான சதாசிவம் நாகராசா (வயது 72) என்பவரை கடந்த மூன்று மாதங்களாகக் காணவில்லை என்று அவரது மனைவி மகேஸ்வரி தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

☞2

## விறகு வெட்டச் சென்றவர் வெடி விபத்தில் படுகாயம்

(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டம், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சாலைப் பகுதியில் விறகு வெட்டச் சென்றவர் வெடி விபத்தில் சிக்கிப் படுகாயம் அடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது எனத் தெரிய வந்துள்ளது.

அந்தப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்றவர் மரம் ஒன்றின் அடிப்பகுதியை வெட்ட முற்பட்டபோது வெடி விபத்து ஏற்பட்டுள்ளது எனத் தெரிய வந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயம் அடைந்த அவர் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாஞ்சோலை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் எனத் தெரிவிக்கப் பட்டது.

## மல்லாவியில் இளம் தம்பதியினர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு!



முல்லைத்தீவு மாவட்டம், மல்லாவியில் இளம் தம்பதியினர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

மல்லாவி, அனிஞ்சியன் குளம் பகுதியைச் சேர்ந்த ரஞ்சன் பிரதீபன் (வயது 31) மற்றும் பிரதீபன்

☞2

நீங்கள்...

#Job Opportunities

பத்திரிகை, சஞ்சிகை பக்க வடிவமைப்புத்துறையில் ஆர்வமுள்ளவரா?

புதிய சிந்தனைகளைச் செயற்படுத்த விரும்புபவரா?

அழகியல் மற்றும் கருத்துப் பரிமாறல் பற்றிய புரிதல் கொண்டவரா?

ஊடகத்துறையில் வடிவமைப்பாளர்களின் முக்கியத்துவம் உணர்ந்தவரா?

ஆமெனில்... இது உங்களுக்கான சந்தர்ப்பம்!!!

துறைசார் அனுபவமுள்ளவர்கள் / ஆர்வமுள்ளோர் உங்கள் பக்க வடிவமைப்பு மாதிரிகளுடன் உடனே தொடர்புகொள்ளுங்கள்!

0773 078 799

#காலைக்கதிர்

## நாவற்குழியில் பூசகர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது கணவர் ஆலய பூசகராவார். அவரது எமது வீட்டுக்கு அருகில் உள்ள மகளின் வீட்டுக்கு இரவில் பாதுகாப்புக்காகப் படுக்கச் செல்பவர்.

மகளின் கணவர் கடந்த 1996ஆம் ஆண்டு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளார். மகள் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் காலமாகியுள்ளார். அதனால் மகளின் வீட்டில் யாரும் இல்லாததால், எனது கணவர், மகளின் வீட்டுக்கு இரவில் பாதுகாப்புக்காகப் படுக்கச் செல்வார். அவ்வாறே கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி இரவு சென்றிருந்தார்.

மறுநாள் அவர் வீட்டுக்கு வராததால் நான் தேடிச் சென்றேன். அப்போது மகளின் வீட்டில் தொலைக்காட்சி இயங்கு நிலையில் இருந்தது. அவரைக் காணவில்லை.

அவர் எங்கும் தேடி காணாத நிலையில் பிள்ளைகளுக்கு அறிவித்தேன். அவர்கள் வந்து பார்த்தபோது, வீட்டின் சுவர்கள் மற்றும் நிலங்களில் இரத்தக்கறைகள் இருந்தன. அத்துடன் அங்கிருந்த எமது பேரனின் காற்சட்டையிலும் இரத்தம் துடைத்த அடையாளங்கள் இருந்தன.

வீட்டைச் சூழவுள்ள அனைத்துப் பகுதிகளிலும் அவரைத் தேடினோம். எங்கும் காணாத நிலையில், அது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தோம்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் எங்களிடம் வாக்குமூலங்களைப் பொலிஸார் பெற்றனர்.

அவர் வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டு இருக்கலாம் எனப் பொலிஸாரும் சந்தேகம் தெரிவித்துள்ளனர். எமக்கு அவர் கடத்தப்பட்டு இருக்கலாம் எனும் சந்தேகமே உள்ளது.

அவர் நகைகள் எதுவும் அணிந்திருக்கவில்லை. அதேவேளை, வீட்டிலும் எந்தப் பொருளும் களவு போகவில்லை.

கடந்த மாதம் மன்னாரில் ஒரு சடலம் காணப்படுகின்றது எனக் கூறி எம்மைப் பொலிஸார் அழைத்துச் சென்றனர். குறித்த சடலம் அடையாளம் தெரியாத அளவுக்குக் காணப்பட்டது. அதனால் எம்மிடம் டி.என்.ஏ. பரிசோதனைக்கான மாதிரிகளைப் பெற்ற பின்னர் எம்மை அனுப்பிவைத்தனர்.

தற்போது மூன்று மாதகாலமாகியும் அவர் பற்றிய எந்தத் தகவல்களும் இல்லை. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை துரிதப்படுத்தி அவரைக் கண்டறிந்து தருமாறு கேட்டுக் கொள்கின்றோம் – என்றார்.

## மல்லாவியில் இளம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாலினி (வயது 27) ஆகிய இருவருமே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். இருவரும் அப்பகுதியில் உள்ள வெதுப்பகத்தில் கடமையாற்றி வந்த நிலையில் கடந்த 10 மாதங்களுக்கு முன்னர் திருமணம் முடித்துள்ளனர்.

இந்நிலையில், இன்று காலை அப்பகுதியில் உள்ள கிணற்றில் இருந்து இருவரும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வவுனியா பல்கலையின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி அலுவலகம் இந்தத் தகவலை அறிவித்துள்ளது.

இவர் வவுனியா பல்கலைக்கழகம் வளாகமாக இருந்தபோது 3 வருடங்கள் வரை முதல்வராகக் கடமையாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக மங்களேஸ்வரன் நியமனம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஹிஷாலினிக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னெடுக்கப்பட்டது.

மகளிர் அமைப்பினர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினர் ஆகியோரின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

குறித்த போராட்டத்தில் மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வடக்கு, கிழக்குக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகளை வழங்கும் நோக்கோடு சுமார் 16 இலட்சம் 'சினோபோர்ம்' தடுப்பூசிகளை சீன அரசு இலங்கைக்கு இன்று அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கான தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டை விரைவுபடுத்துவது தொடர்பில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி இந்த விசேட திட்டத்தை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த தடுப்பூசிகளை இலங்கைக்கான சீனத் தூதுவரினால் ஜனாதிபதியிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான தடுப்பூசிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கி வைக்கப்பட்டன.

இந்தத் தடுப்பூசிகள் சுகாதார சேவைகள்திணைக்களத்தின்பரிந்துரைகளுக்கு அமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில், சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி மற்றும் சீனத் தூதரக அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@
gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வாக்காளர் பதிவுக் கடப்பாடு

புதிய வாக்காளர்களாகப் பதிவதற்கு தகுதி பெற்றுள்ளவர்கள் தங்கள் பெயர்களை இவ்வாண்டுக்கான தேருநர் பட்டியலில் சேர்த்துக் கொள்வதற்கான பதிவுகளை அடுத்த நான்கு நாள்களுக்குள் செய்து முடிக்க வேண்டும் என இலங்கை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான தேருநர் பட்டியலில் – வாக்காளர் இடாப்பில் – வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான இறுதி தினம் வரும் 31ஆம் திகதி ஆகும்.

வழக்கமாக அரச அலுவலர்கள் வீடு வீடாகத் தேடிச் சென்று படிவங்களை விநியோகித்து, வாக்காளர்களைப் பதிவு செய்யும் மற்றும் பதிவுகளைச் சீர்செய்யும் நடவடிக்கைகளை எடுப்பர். ஆனால் கொரோனாப் பேரிடர் காரணமாக அது இம்முறை நடைபெறாது. அலுவலர்கள் வீடுகளுக்குத் தேடி விண்ணப்பப் படிவங்களுடன் வர மாட்டார்கள். புதிதாகத் தகுதிபெறும் வாக்காளர்தான் தத்தமது பகுதி கிராமசேவையாளரிடம் சென்று, படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய பதிவுகளைச் செய்வதற்கு இன்னும் சில தினங்களே இருக்கின்றமையால் புதிதாக 18 வயதை எட்டியவர்கள் – வாக்காளர்கள் தகுதி நிலையை அடைந்தவர்கள் – தவறாது தங்கள் வாக்குகளைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் நினைவூட்டல் அறிக்கை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜுன் முதலாம் திகதியன்று 18 வயதை அடைந்தது இலங்கைப் பிரஜை எவரும் இவ்வாண்டுக்கான வாக்குரிமையைப் பெற்றவர்களாவர். ஆனால் தேருநர் பட்டியலில் பெயரை சேர்ப்பதன் மூலமே அந்த உரிமையை நிலைநாட்ட முடியும் என்பதால் அதனைத் தவறாது மேற்கொள்ள வேண்டும் எனப் பசுமை இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த இயக்கம் வலியுறுத்திச் சுட்டிக்காட்டியபடி இன்னொரு விடயம் சகலராலும் அவதானிக்கப்பட வேண்டியுள்ளது. அதனை நாம் ஒரு தேசிய கடமையாக – தமிழ்த் தேசப் பொறுப்பாக – கருதி ஆற்ற வேண்டியுள்ளது.

பலம் அனைத்தையும் இழந்து, அரசியல் ரீதியாக வலுவற்று இருக்கும் தமிழர் தேசத்தைப் பொறுத்தவரை எங்களிடம் மிஞ்சி இருப்பது ஜனநாயக வலிமை மட்டும்தான். பேரினவாத பௌத்த, சிங்கள தேசத்தின் முன்னால் தமிழர் தேசத்தின் ஜனநாயக வலிமை மிகவும் அற்பமானது. ஆனால் அந்த அற்பசொற்ப வலிமையைக் கூட எங்களின் தவறுகள், பலவீனங்கள், பொறுப்பின்மை போன்றவற்றினால் நாம் இழந்து வருகின்றமை வேதனைக்குரியது. நமது ஜனநாயகப் பலத்தில் முக்கியமானது நாடாளுமன்ற உறுப்புரிமை வலிமையாகும். தமிழர் தேசப் பரப்பின் நாடாளுமன்றப் பலம் என்பது இங்குள்ள வாக்காளர் எண்ணிக்கையில்தான் தீர்மானிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் தீர்மானிக்கப்படும். மாவட்ட ரீதியாகப் பங்கிடப்படும்.

1988 தேருநர்கள் பட்டியலின்படி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ் தேர்தல் மாவட்டம் 12 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது அது ஏழாகக் குறைந்தது. 2020 கணக்கெடுப்பின்படி அது 6 ஆகக் குறையும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

யுத்தத்தால் மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம்பெயர்ந்தமை, உயிரிழந்தமை போன்றன வாக்காளர் பதிவுப் பட்டியல் சீராக்கலின்போது பெரிய மாற்றத்தை வெளிப்படுத்தின. அதனால் தொடர்ந்து நாடாளுமன்ற வலிமையையும் நாம் – தமிழர்கள் – இழந்து வருகின்றோம்.

பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் புலம்பெயர் தேசங்கள் எங்கும் இடம் பெயர்ந்து, பரந்துபட்டு வாழ்கின்றனர். லட்சத்துக்கும் அதிகமானோர் தமிழர் தாயக பூமியில் இருந்து – வடக்கு, கிழக்கிலிருந்து – வெளி இடங்களுக்கு இடம் பெயர்ந்து வாழ்கின்றனர்.

இன்னோரன்ன காரணங்களினால் தமிழர் தாயகப் பூமியில் ஜனநாயக வலிமையும் மிகவும் பலவீனப்பட்டுச் செல்கின்றது. இதிலிருந்து மீளுவதற்கு நாம் சில அவசர, அவசிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது.

* தமிழர் தாயகப் பகுதிகளில் 18 வயதை எட்டும் ஒவ்வொருவரும் தம்மைத் தவறாது உரிய காலத்தில் வாக்காளர்களாகப் பதிவு செய்ய வேண்டும்.

*வடக்கு – கிழக்குக்கு வெளியே இடம்பெயர்ந்த இப்பிரதேச மக்கள், தங்கள் வாக்குரிமையை – வாக்குப்பதிவை – வடக்குக் கிழக்கில் உள்ள தத்தமது இடங்களுக்கு மாற்றிக்கொள்ள வேண்டும் .

*புலம்பெயர் தேசங்களில் வதியும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த இலங்கை பிரஜைகளும் இரட்டை பிரஜாவுரிமை கொண்டோரும் தங்கள் வாக்குகளை தவறாது தமிழர் பிரதேசத்தில் பதிவு செய்ய வேண்டும். இதனை நமது கட்டாயக் கடமை – பொறுப்பாக – முன்னெடுப்போம்.

# ஹிஷாலினி கொலைக் குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனை வழங்கவேண்டும்

## சஜித் வலியுறுத்தல்

மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் வழங்கும் கட்சி என்ற வகையில், அண்மையில் ஹிலினி என்ற சிறுமி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற வகையில் விசாரணைகளை முன்னெடுத்து, அதனுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனையை வழங்கபடவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் எமது நாட்டில் நடைமுறையிலிருக்கும் சட்டங்களில் காணப்படும் குறைபாடுகளே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதற்குக் காரணமாக அமைந்திருப்பதாகத் தெரிவித்துள்ள அவர், அந்தச் சட்டங்களை மேலும் வலுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு –

மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு என்பது எமது நாட்டில் உயர்ந்தபட்ச முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டிய இரண்டு விடயங்களாகும். இருப்பினும் அண்மைக்காலங்களில் பதிவாகியுள்ள சம்பவங்களை அடிப்படையாக கொண்டு நோக்கும்போது பெண்கள், தாய்மார் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் யுகத்திலேயே நாம் வாழ்கின்றோம் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் தற்போது நடைமுறையிலிருக்கும் கொள்கைகள் மற்றும் சட்டதிட்டங்களில் காணப்படும் குறைபாடுகளே இதற்கு முக்கிய காரணமாகும்.

இந்த விடயம் தொடர்பில் நாட்டில் காணப்படும் சட்ட வரையறைகள் எவ்வகையிலும் போதுமானவை அல்ல. எனவே, அவற்றை மேலும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் அதே வேளை, அதன்மூலம் பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைகளையும் துஷ்பிரயோகங்களையும் முடிவிற்குக் கொண்டுவர வேண்டும். எனவே இந்த விவகாரம் தொடர்பில் நாட்டில் தற்போது நடைமுறையிலிருக்கும் சட்டதிட்டங்களை மேலும் வலுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளைமேற்கொள்வது தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தி உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. – என்றார்.

# புதிய வாக்காளர் பதிவு காலக்கெடு ஜுலை 30!

## தவறவிடவேண்டாம் எனத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வேண்டுகோள்

இலங்கைத் தேர்தல்கள் ஆணையம் புதிய வாக்காளர்களாகத் தகுதி பெற்றுள்ளவர்கள் தங்கள் பெயர்களைத் தேருநர் இடாப்பில் சேர்த்துக் கொள்வதற்கான பதிவுகளை ஜுலை 30ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவேண்டும் என அறிவித்துள்ளது. மேலும், கொரோனாப் பேரிடர் காரணமாக அலுவலர்கள் வீடுவீடாகச் சென்று படிவங்களை விநியோகித்து வாக்காளர்களைப் பதிவு செய்யும் வழமையான நடைமுறை இந்த ஆண்டு நடைபெறாது என்றும் தகுதிபெற்ற வாக்காளர்கள் தாமாகவே கிராம சேவையாளரிடம் சென்று படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து கையளிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

எனவே, பதிவு செய்வதற்கு இன்னும் இரண்டொரு தினங்களே இருக்கும் நிலையில் புதிய வாக்காளர்கள் இந்தக் காலக்கெடுவைத் தவற விட்டுவிடவேண்டாம் எனத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பொதுச்செயலாளர் மகேசன் கஜேந்திரன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -வாக்குரிமை இலங்கைக் குடிமகனாகவுள்ள ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமையாகும். இலங்கையில் வாக்காளர் தினம் கொண்டாடப்பட்டுவரும் ஜுன் முதலாம் திகதியன்று 18 வயது பூர்த்தியடைந்த இலங்கைக் குடிமகனாகவுள்ள எவரும் வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள். தேருநர் இடாப்பில் பெயர்களைப் பதிவு செய்வதன் மூலம் மாத்திரமே இந்த வாக்குரிமை உறுதி செய்யப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடையும்போது தேர்வாகும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறைவடையும். உதாரணமாக, 1989 ஆம் ஆண்டு யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்ட நிலையில் வாக்காளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்ததன் காரணமாகத் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 7 ஆகக் குறைவடைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி யாழ்.மாவட்டத்துக்கு 6 நாடாளுமன்ற ஆசனங்களே ஒதுக்கப்பட்டுள்ளன.

வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்து செல்லுதல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்களில் மாத்திரம் குறைவை ஏற்படுத்தும் ஒன்றல்ல. மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதி, மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை போன்றவற்றிலும் குறைவை ஏற்படுத்தும் ஒன்றாகும்.

அந்தவகையில், வாக்களிக்கத் தகுதிபெற்ற அனைவரும் தங்களை வாக்காளராகப் பதிவு செய்தல் ஒரு தேசிய கடமையாகும்.

எனவே, ஜுலை 30 ஆம் திகதிக்கு முன்பாக புதிய வாக்காளர்கள் அனைவரும் தமது பகுதிக் கிராம சேவையாளரிடம் சென்று தவறாது பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



# கலிபோர்னியாவில் துப்பாக்கிச் சூடு பொலிஸ் அதிகாரி உள்பட 5 பேர் பலி

அமெரிக்காவில் சமீப காலமாக துப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தாலும் குறையவில்லை.

இந்த நிலையில் அமெரிக்காவில் மீண்டும் துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்துள்ளது. கலிபோர்னியா மாகாணம் வடமேற்கில் உள்ள பேக்கர்ஸ் பீல்டில் உள்ள ஒரு வீட்டில் மர்மநபர் ஒருவர் துப்பாக்கி முனையில் சிலரை பிணை கைதிகளாக பிடித்து வைத்திருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து கலிபோர்னியாவின் துணை ஷெரீப் கேம்பஸ் தலைமையிலான பொலிஸார் அங்கு சென்றனர். அந்த வீட்டை சுற்றி வளைத்து பிணை கைதிகளை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். வீட்டின் கூரை மீது ஏறி உள்ளே நுழைந்தனர். அப்போது மர்ம நபர் துப்பாக்கியால் சுட்டதில் பொலிஸ் அதிகாரி கேம்பஸ் உயிரிழந்தார்.

இதையடுத்து மர்மநபரை பொலிஸார் சுட்டுக் கொன்றனர். வீட்டுக்குள் ஒரு பெண்ணும், அவரது இரண்டு மகன்களும் உயிரிழந்து கிடந்தனர். அவர்கள், துப்பாக்கி சூடு நடத்திய நபரின் மகன்கள் மற்றும் அவர்களது தாய் என்று கூறப்படுகிறது.

மேலும் வீட்டில் இருந்து இரண்டு சிறுமிகள் உள்பட 4 பெண்கள் பத்திரமாக தப்பி வெளியே வந்தனர். இவர்கள் துப்பாக்கி சூட்டில் பலியானர்களின் உறவினர்களா? என்பது குறித்து உறுதிப்படுத்தப்படவில்லை.

மேலும் துப்பாக்கி சூடு நடத்திய 41 வயதான நபரின் பெயரையும் பொலிஸார் வெளியிடவில்லை. இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் ஆட்சியை பிடித்தது இம்ரான்கான் கட்சி



பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் 53 இடங்களைக் கொண்ட சட்டசபைக்கு நேற்று முன்தினம் தேர்தல் நடந்தது. மொத்தமுள்ள 53 இடங்களில் 8 இடங்கள் நியமன உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சூழலில், மீதமுள்ள 45 இடங்களுக்கு தேர்தல் நடந்தது.

கடுமையான வன்முறைகள் மற்றும் மோசடி புகார்களுக்கு மத்தியில் இந்தத் தேர்தல் நடந்து முடிந்தது. தேர்தலின் போது நடந்த வன்முறையில் 2 பேர் பலியாகினர். பொலிஸார் உள்பட பலர் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில், வாக்குப்பதிவு முடிவடைந்ததும் உடனடியாக வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. அதனைத் தொடர்ந்து நேற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான ஆளும் பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி 23 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது.

இந்தத் தேர்தலில் முக்கிய எதிர்க்கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சி 10 இடங்களைக் கைப்பற்றி 2ஆவது இடத்தைப் பிடித்தது. அதேசமயம் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி (நவாஸ்) வெறும் 6 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.






# துனிசியா நாடாளுமன்றம் கலைப்பு

## பிரதமர் பதவி நீக்கம்

வட ஆபிரிக்க நாடான துனிசியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு தீவிரமாக உள்ளது. அங்கு இதுவரை 5.69 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொடிய வைரஸால் அங்கு 18 ஆயிரத்து 600க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா நெருக்கடியால் அந்நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் இந்த நெருக்கடி நிலைக்கு பிரதமர் ஹிச்செம் மெச்சிச்சி தான் காரணம். அவர் கொரோனா வைரஸை முறையாக கையாளவில்லை என குற்றம் சாட்டப்பட்டது.

இந்த சூழலில் பிரதமர் ஹிச்செம் மெச்சிச்சி மற்றும் அவரது மிதவாத முஸ்லிம் கட்சியான என்னாதா கட்சிக்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தலைநகர் துனிஸ் உட்பட பல்வேறு முக்கிய நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தினர். இந்த போராட்டத்தின் போது பல இடங்களில் பெரும் வன்முறை வெடித்தது. பல்வேறு நகரங்களில் உள்ள என்னாதா கட்சி அலுவலகங்களை போராட்டக்காரர்கள் அடித்து நொறுக்கினர். டூஜர் என்கிற நகரில் உள்ள கட்சியின் உள்ளூர் தலைமையகத்துக்கு போராட்டக்காரர்கள் தீவைத்தனர். இது தவிர மேலும் பல இடங்களில் அரசு சொத்துக்கள் மற்றும் வாகனங்களை போராட்டக்காரர்கள் அடித்து நொறுக்கி, தீ வைத்தனர். இதனால் நாடு முழுவதும் கடும் அசாதாரண சூழல் உருவானது.

இதையடுத்து தொலைக்காட்சி வாயிலாக நாட்டு மக்களுக்கு உரையாற்றிய அந்த நாட்டின் அதிபர் கைஸ் சையத், பிரதமர் ஹிச்செம் மெச்சிச்சியை பதவி நீக்கம் செய்து உத்தரவிட்டார். மேலும் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதாகவும் ஆட்சிப் பொறுப்பை தான் ஏற்கிறேன் எனவும் அவர் அறிவித்தார்.

இதுபற்றி அவர் பேசுகையில் “நாங்கள் இந்த முடிவுகளை எடுத்துள்ளோம். துனிசியாவில் சமூக அமைதி திரும்பும் வரை நாங்கள் அரசைக் காப்பாற்றுவோம். நாட்டில் மேலும் வன்முறை அதிகரித்தால் அதற்கு ராணுவ சக்தியுடன் பதில் அளிக்கப்படும் என உறுதிபட தெரிவித்தார்.

துனிசியாவை பொறுத்தவரையில் அதிபர் மற்றும் பிரதமர் மக்களின் வாக்குகளில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்நாட்டின் அரசியலமைப்பின்படி அதிபர் ராணுவம் மற்றும் வெளிநாட்டு விவகாரங்களை மட்டுமே மேற்பார்வையிடுவார். ஆனால் 2019ல் அதிபராக தேர்வு செய்யப்பட்ட கைஸ் சையத், பதவிக்கு வந்த நாள் முதல் பிரதமர் ஹிச்செம் மெச்சிச்சியுடன் முரண்பட்டு வந்தார். இருவருக்கும் இடையில் அதிகார போட்டி நிலவி வந்த நிலையில், தற்போது பிரதமர் ஹிச்செம் மெச்சிச்சியை அதிபர் கைஸ் சையத் பதவி நீக்கம் செய்துள்ளார்.

இதனால் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சிகள் அதிபர் கைஸ் சையத்தின் இந்த நடவடிக்கையை ஆட்சிக் கவிழ்ப்பு சதி என குற்றம் சாட்டியுள்ளன.

# 'ஒன்றியம்' என்பதைத் தாண்டி பா.ஜ.கவை எதிர்த்து வீரியமாய் தி.மு.க. அரசு செய்தது என்ன?



## சீமான் கேள்வி

ஒன்றியம் எனும் வார்த்தையைக் கூறியே ஒப்பேற்றிவிடலாம் என எண்ணாமல், மம்தா பானர்ஜியைப்போல உளமார, ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க அரசின் கொடுங்கோன்மையை எதிர்க்க தி.மு.க. அரசு முன்வர வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியிருக்கிறார்.

இது தொடர்பாக சீமான் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், தமிழகத்தில் தனித்துவ வலிமையில்லாத நிலையில் அ.தி.மு.கவின் தோளேறி பின்வாசல் வழியாக ஆட்சியதிகாரத்தைப் பிடிக்கத் துடிக்கும் பா.ஜ.கவை முதன்மை எதிரியாகக் கட்டமைத்து, அதனையொட்டிய பரப்புரைகளை முன்வைத்து, அதன் விளைவாக ஆட்சியதிகாரத்திற்கு வந்த தி.மு.க., இன்றைக்கு பா.ஜ.க இட்ட பாதையில் செல்வதும், அவர்களை மென்மையான போக்கோடு அணுகுவதும் பெருத்த ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது.

நாட்டின் பன்முகத்தன்மையை முற்றாகச் சிதைத்தழித்து, ஒற்றை மையத்தை முற்றுமுழுதாகக் கட்டியெழுப்பி அதிகாரப்பரவலையும், கூட்டாட்சித் தத்துவத்தையும் குலைத்து, தேசிய இனங்களை, 'இந்து' எனும் மாய வலைக்குள் வீழ்த்திட முயலும் பா.ஜ.கவை, வலிமை கொண்டு மூர்க்கமாக எதிர்த்து அரசியல் செய்யாது, பா.ஜ.க. செய்யும் அரசியலுக்குள் கரைந்துபோகும் தி.மு.கவின் செயல்பாடுகள் யாவும் வழமையான பிழைப்புவாதமாகும்.

இந்திய அரசியலமைப்புச்சாசனத்தில் கூறப்பட்ட 'ஒன்றியம்' எனும் சொல்லைப் பயன்படுத்தியதைத் தாண்டி தி.மு.க. அரசு, பா.ஜ.கவை எதிர்த்து வீரியமாய்ச் செய்திட்ட அரசியலென்ன? 2019ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத்தேர்தலில் பா.ஜ.கவுக்கெதிராக நாடெங்கிலும் எழுந்த எதிர்க்கட்சிகளின் அணிச்சேர்க்கையை, ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக முந்திக்கொண்டு அறிவித்து முறியடித்த ஐயா ஸ்டாலின், தற்போது அதன் நீட்சியாகவே பா.ஜ.கவை பகைக்காது அரசியல் செய்ய முனைகிறார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

உயரடுக்குப் பாதுகாப்பில் இருக்கும் எத்தனையோ பேர் வந்ததே தெரியாமல், தமிழகத்திற்கு வருகை புரிந்துவிட்டுத் திரும்பும்போது, மோகன் பகவத்துக்கு மட்டும் இப்பேர்பட்ட சிறப்புச்சலுகை எதற்காக? சமூக வலைத்தளங்களில் உத்தரவுக் கடிதத்தின் நகல் வெளியாகி எதிர்ப்பினையும், கண்டனத்தினையும் எதிர்கொண்ட பிறகு, வேறு வழியின்றித்தானே அரசியல் நெருக்கடி காரணமாக உத்தரவுக் கடிதம் அனுப்பிய அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது? இல்லாவிட்டால், சேவாபாரதியை சத்தமின்றித் தலைமைச் செயலகத்திற்கு அழைத்ததுபோல மோகன் பகவத்துக்கு எல்லா மரியாதையும் செய்தல்லவா அனுப்பியிருப்பார்கள்? இப்போதும் என்ன குறைவு? அதிகாரியைக் கண்துடைப்புக்கு நீக்கிவிட்டு, மோகன் பகவத்தின் வருகைக்கு எவ்விதக்குறையும் வைக்காதுதானே நடத்தினார்கள்?

நாளை ஐயா ஸ்டாலின் அவர்கள் டெல்லிக்குச் சென்றால் இதேபோலச் சாலைகளைச் சீரமைத்து, தெருவிளக்குகளைப் பராமரித்து இவ்வளவு மரியாதையும், முன்னுரிமையும் வழங்கப்படுமா? தமிழக முதல்வர்கள் யாருக்காகவாவது டெல்லியில் அப்பேர்ப்பட்ட முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கிறதா? இல்லை, இனி யாவதுதான் வழங்கப்படுமா? இத்தகைய புறச்சூழல் இருக்க, மோகன் பகவத்துக்கு எதற்கு அவ்வளவு முதன்மை வசதிகள்? அவர் ஒரு அமைப்பின் தலைவர் என்பதைத்தாண்டி, அவருக்கான சமூக அங்கீகாரமென்ன? அவரென்ன தேச விடுதலைப்போராட்ட வீரரா? தேச விடுதலைக்கே எவ்விதப் பங்களிப்பையும் செய்யாது வெள்ளையர்களின் அடிவருடிகளாகச் செயல்பட்ட ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் தலைவர்தானே? அத்தகைய பின்புலம் கொண்டவரைக் கொண்டாடுவதற்கு என்ன தேவையிருக்கிறது? அதுவும் ஆரியத்தை ஆதிமுதல் எதிர்த்து வரும் தமிழர் நிலத்தில் இவரை வரவேற்று உபசரிக்க என்ன அவசியம் வந்தது? பதில் சொல்வாரா ஐயா ஸ்டாலின்?

எழுவர் விடுதலையில் ஆளுநருக்கு அழுத்தம் கொடுத்தோ அல்லது 161 ஆவது சட்டப்பிரிவின்படி மீண்டும் தீர்மானம் இயற்றியோ எழுவர் விடுதலையைச் சாத்தியப்படுத்த வேண்டிய தி.மு.க., அது எதனையும் செய்யாது, தனக்கு அதிகாரமில்லையெனும் ஆளுநரின் உண்மைக்குப் புறம்பான கூற்றை ஏற்பதுபோல, ஒப்புக்கு குடியரசுத்தலைவருக்குக் கடிதமெழுதி அனுப்பிவிட்டால் போதுமா? அந்தக் குடியரசுத்தலைவரை நேரில் சந்தித்தபோது ஐயா கருணாநிதியின் படத்தைச் சட்டப்பேரவையில் திறந்து வைக்க அழைப்புவிடுத்த ஐயா ஸ்டாலின், எழுவர் விடுதலை குறித்து ஒருவார்த்தைகூடப் பேசாததன் மூலம் குடியரசுத்தலைவருக்குக் கடிதம் அனுப்புவது வெற்று நாடகம் என்பதை ஒப்புக்கொண்டுவிட்டார்தானே? நீட் தேர்வு, எழுவர் விடுதலை, கூடங் குளம் அணு உலை, ஸ்டெர்லைட் ஆலை, காட்டுப்பள்ளி அதானி துறைமுக விரிவாக்கம், நியூட்ரினோ என தமிழகத்தின் முதன்மைச் சிக்கல்கள் யாவற்றிலும் பா.ஜ.க. நினைப்பதே நடக்கிறதே அது எப்படி? இதுதான் பா.ஜ.கவை தி.மு.க. எதிர்க்கிற இலட்சணமா? இதுதான் மாநிலத்தன்னாட்சியை நிலைநாட்டும் அண்ணாவின் வழிவந்த ஆட்சியா? தன்னைப் பற்றி அவதூறு பரப்பிய எச்.ராஜா மீது நடவடிக்கை எடுக்கக்கோரி மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் அண்ணன் ஜவாஹிருல்லாவே காவல்துறையினரிடம் புகாரளித்தும், அது இருசமூகங்களிடையே பிளவை உண்டாக்க முனைகிறது என எச்சரித்தும் அந்தப் புகார் மனு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது ஏன்? ஆகவே, இனிமேலாவது, 'ஒன்றியம்' எனும் வார்த்தையைக்கூறியே, ஒப்பேற்றிவிடலாம் என எண்ணாமல், மேற்கு வங்கத்தை ஆளும் மம்தா பானர்ஜியைப் போல உளமார ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசின் கொடுங்கோன்மையை எதிர்க்க முன்வர வேண்டும் எனவும், மோடி அரசின் நாசகாரத்திட்டங்களிலிருந்தும், சட்டங்களிலிருந்தும், தமிழ்நாட்டைப் பேணிக்காத்து மாநிலத்தின் மண்ணுரிமையையும், தன்னுரிமையையும் நிலைநிறுத்த வேண்டுமெனவும் மாநிலத்தை ஆளும் தி.மு.க. அரசை நாம் தமிழர் கட்சியின் சார்பாக வலியுறுத்துகிறேன் என தெரிவித்திருக்கிறார்.

# நடிகர் விஜய்க்கு விதிக்கப்பட்ட அபராதத்திற்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதிப்பு



சொகுசுக் கார் வழக்கில் நடிகர் விஜய்க்கு தனி நீதிபதி விதித்த அபராதத்திற்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கிறது.

2012 ஆம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு காருக்கு நுழைவு வரியிலிருந்து விலக்குக்கோரி நடிகர் விஜய் தாக்கல் செய்த வழக்கில் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து அவர் மேல்முறையீடு செய்திருந்தார். அபராதம் விதித்து நீதிபதி எஸ்.எம். சுப்பிரமணியம் அளித்த தீர்ப்பின் நகல் இல்லாததால், விஜய்யின் மேல்முறையீடு மனு விசாரணைக்கு பட்டியலிடப்படவில்லை. இந்த நிலையில், தனி நீதிபதியின் தீர்ப்பின் நகல் இல்லாமல் வழக்கைப் பட்டியலிட பதிவுத் துறைக்கு உத்தரவிடக்கோரி விஜய் தரப்பில் கூடுதல் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்தக் கூடுதல் மனு இன்று நீதிபதிகள் எம்.துரைசாமி, ஆர். ஹேமலதா அமர்வில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேலும், தீர்ப்பு நகலின்றி விசாரணைக்கு ஏற்க வேண்டும் என்ற கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்று அந்த மனு விசாரணைக்கு வந்தது.

இன்று விஜய் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் தனது வாதங்களை முன்வைத்தார். அதில், ரோல்ஸ் ராய்ஸ் காருக்கு நுழைவு வரி செலுத்தவேண்டும் என்ற உத்தரவை எதிர்க்கவில்லை; மதிக்கிறோம். நீதிமன்றத்தை நாடியதற்காக விதித்த ரூபா. ஒரு லட்சம் அபராதம் மற்றும் தனி நீதிபதியின் விமர்சனங்களை ரத்துச்செய்யுங்கள் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அப்போது அரசு தரப்பில், விஜய்க்கு அபராதம் விதித்தது மற்றும் விமர்சனங்களை நீக்குவது தொடர்பாக எந்தக் கருத்தையும் தெரிவிக்கமுடியாது என்றும், அதேசமயம், மீதம் செலுத்தவேண்டிய நுழைவு வரியை கணக்கிட்டுத் தெரிவிக்க தயாராக இருப்பதாகவும் விளக்கமளிக்கப்பட்டது. அதனைப் பதிவு செய்துகொண்ட நீதிபதிகள், ஏற்கெனவே 20% வரியை விஜய் செலுத்தி இருப்பதால் மீதம் எவ்வளவு வரி செலுத்தவேண்டும் என்பதை ஒரு வாரத்தில் கணக்கிட்டு தெரிவிக்கும்படி உத்தரவிட்டனர். மேலும், தனி நீதிபதி எஸ்.எம். சுப்ரமணியம் விதித்த ரூபா. ஒரு லட்சம் அபராதத்திற்கு இடைக்காலத் தடையையும் விதித்து உத்தரவிட்டிருக்கின்றனர்.

# தெலங்கானா ராமப்பா கோவில் உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோவால் பிரகடனம்



தெலங்கானா மாநிலத்தில் அமைந்துள்ள ருத்ரேஸ்வரா கோவில் உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஜூலை 25 அன்று நடைபெற்ற உலக பாரம்பரிய சின்னங்கள் வரையறைக் குழுவில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் இந்தியாவின் 39 ஆவது உலக பாரம்பரிய சின்னமாகி உள்ளது இந்தக் கோவில். 12-13 ஆவது நூற்றாண்டுக் காலப்பகுதியில் இந்தக் கோவில் கட்டப்பட்டுள்ளது. சுமார் 40 ஆண்டு காலம் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுள்ளன என வரலாற்றாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்தக் கோவில் ராமப்பா கோவில் என்றும் அழைக் கப்படுகிறது.

இந்தியாவில் உள்ள ஆறு இடங்களான காஞ்சிபுரம் பகுதியில் உள்ள கோவில்கள், வாரணாசியில் உள்ள கங்கை நதிக்கரை படித்துறை, சத்புரா புலிகள் காப்பகம் போன்றவை இந்த உலக பாரம்பரிய சின்னத்திற்கான உத்தேசப் பட்டியலில் இடம் பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனா விதிமுறைகளை மீறிப் போராட்டம் சண்முகம் உள்பட 3,500 பேர் மீது வழக்குப்பதிவு

விழுப்புரத்தில் அரசுக் கட்டுப்பாட்டுகளை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தியதாக முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் உட்பட மூவாயிரத்து 500 பேர் மீது காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்துள்ளனர். மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பெயரில் தொடங்கப்பட்ட பல்கலைக்கழகத்தை, சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் இணைக்க திமுக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனைக் கண்டித்து விழுப்புரத்தில் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், கொரோனா விதிகளை மீறிப் போராட்டம் நடத்தியதாக 3 ஆயிரத்து 500 பேர் மீது 6 பிரிவின் கீழ் பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# கனகர் கிராமத்தில் காணி இழந்தவர்களுக்கு காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கை



பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, ஊறணி கனகர் கிராமத்தில் காணிகளை இழந்தவர்களுக்கு காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இந்த பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஊறணி கனகர் கிராமத்தில் காணிகளை இழந்தவர்களுக்கு காணி வழங்குதற்கு ஆட்சேபனை மற்றும் மேன்முறையீடுகள் இருப்பின் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 1 ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை சமர்ப்பிக்குமாறு, பொத்துவில் பிரதேச செயலாளர் சந்துரூபன் அனுருத்த அறிவித்துள்ளார்.

கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக சில கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக ஆட்சேபனைகளை தெரிவிப்பதற்கு வழங்கிய காலக்கெடு கடந்த 16 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் ஓகஸ்ட் 1ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனகர் கிராமத்தில் வாழ்தவர்கள் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் தெரிவு செய்யப்பட்டிருத்தல், காணிக்கான உத்தரவுப்பத்திரம் (சமீப காலத்தில் வழங்கிய உத்தரவுப்பத்திரம் புறக்கணிக்கப்படும்), வாக்காளர் இடாப்பு பதிவு, புனர்வாழ்வு உதவி படிவம், பொலிஸ் அறிக்கை (2010ஆம் ஆண்டுக்கு முன்னர் வைத்திருத்தல்), ஏக்கர் வரிக்கான பற்று சீட்டு முதலான ஏற்றுக் கொள்ள கூடிய வேறு ஆவணங்கள் தகைமைகளாக கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நேர்முகப் பரீட்சைக்காக சமூகமளித்தவர்களில் தகுதியானவர்களாக தெரிவானவர்கள் 102 பேர். அவர்களின் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களை பிரதேச செயலகத்தில் அல்லது கிராம சேவகரிடம் பார்வையிட முடியும். சம்மந்தப்பட்ட பெயர்கள் தொடர்பாக ஆட்சேபனை இருக்குமாயின் அதனை எழுத்து மூலம் அறிவிக்க முடியும். குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக வசித்து, அபிவிருத்தி செய்தவர்களின் பெயர்கள் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிடப்படாமல் இருந்தால் அவர்கள் அங்கு வாழ்ந்ததற்கான சான்றுப்படுத்தும் ஆவணங்களுடன் மேன்முறையீட்டினை சத்திய கடதாசி மூலம் அறிவிக்கு மாறு கேட்கப்பட்டுள்ளது.

மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், பொத்துவில் எனும் முகவரிக்கு அல்லது பிரிவின் கிராம உத்தியோகத்தருக்கு எழுத்து மூலம் கையளிக்குமாறு அறிவித்துள்ளார். இது தொடர்பான கடிதத்தை கையளிக்கும் போது கையளிக்கப்பட்ட தற்கான ஆவணத்தையும் கட்டாயமாக பெற்றுக் கொள்ளமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ஜவாத் மரைக்கார் வீதிக்கு நீர்க் குழாய்கள் இணைப்பு

அக்கரைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பட்டியடிப்பிட்டி ஜவாத் மரைக்கார் வீதிக்கு நீர் குழாய்கள் பொருத்தப்பட்டு இணைப்புக்கள் வழங்கப்பட்டது.

அக்கரைப்பற்று பிரதேசசபை தவிசாளர் எம்.ஏ.றாசீக், சபை உதவித் தவிசாளர் ஏ. எம். அஸ்ஹர் ஆகியோர் இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.



பிரதேச சபையினுடைய சகல வீதிகளுக்குமான நீர்க் குழாய்களை இணைக்கும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் ஜவாத் மரைக்கார் வீதி உள்வாங்கப்பட்டு இவ்வேலைத்திட்டம் முற்றுப்பெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச சபையும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையும் இணைந்து மேற்கொள்ளும் இத்திட்டத்தில் தவிசாளர் றாசிக் கருத்து தெரிவிக்கும் போது இந்த வருட இறுதிக்குள் எமது பிரதேசத்தில் எஞ்சியிருக்கும் ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள எல்லா வீதிகளுக்கும் தண்ணீர் இணைப்புடன் கொங்கிரீட் இடுவதற்குமான பூரணப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் ஒவ்வொன்றும் முற்றுப்பெற்று வேலைகள் ஆரம்பிக்கின்ற தறுவாயில் இருப்பதாக தெரிவித்தார்.



# மட்டக்களப்பு பொது சந்தையில் நேற்று 10 பேருக்கு கொரோனா

மட்டக்களப்புநகர்பொது சந்தை தொகுதியில் உள்ள வர்த்தக நிலைய பகுதியில் நேற்று திங்கட்கிழமை 79 பேருக்கு அண்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது, அதில் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பொது சுகாதார வைத்திய அதிகாரி கே.கிரிசுதான் தலைமையில் பொது சுகாதார வைத்திய அலுவலக குழுவினரால் அண்டிஜன் பரிசோதனை செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டது.

இதற்கமைய அதிக தோற்றாளர்கள் இனங்காணப்பட்டதை தொடர்ந்து இரு வர்த்தக நிலையங்கள் தற்காலிகமாக பொது சுகாதார பரிசோதகரினால் மூடப்பட்டு முத்திரையிடப்பட்டன. இந்த நிலையில் தொடர்ந்து வர்த்தக ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் சுகாதார நடைமுறையை பேணி நடந்துகொள்ளுமாறு சுகாதார தரப்பினர் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் வியாபாரி ஒருவர் கைது

ஏறாவூர் சந்தை வீதியில் 37 வயதுடைய பிரபல ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரி ஒருவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளதுடன், போதை வியாபாரத்திற்கு பயன்படுத்திய முச்சக்கர வண்டியும் கைப்பற்றப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய புலனாய்வுப் பிரிவினரும், ஏறாவூர் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போதே மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்களிடம் இருந்து ஹெரோயின் போதைப்பொருள் 8 கிராம் 120 மில்லி கிராமும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் போதைப் பொருள் வியாபாரத்திற்காக பயன்படுத்திய முச்சக்கர வண்டியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய சந்தேக நபர் பிரபல போதைவஸ்து வியாபாரி என்றும், குறித்த சந்தேக நபருக்கு ஏற்கனவே போதைப்பொருள் சம்பந்தப்பட்ட வழக்கு உயர் நீதிமன்றில் உள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறிந்த நபரே ஓட்டமாவடி, வாழைச்சேனை, பிறைந்துறைச்சேனை ஆகிய பிரதேசங்களுக்கு ஹெரோயின் போதைப்பொருளை வினியோகிப்பவர் என தெரிய வந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் சுகாதார தொழிலாளர்களுக்கும் தடுப்பூசி

அக்கரைப்பற்று பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் அடங்கலாக 350 பேருக்கான கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு பாயிஷா மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது. இந்த தடுப்பூசி வழங்கும் நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ. றாஸிக், உறுப்பினர் ஏ.ஜி. பர்ஸாத் உட்பட பலரும் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டனர்.

மேற்படி தடுப்பூசி செலுத்தும் செயற்திட்டங்களில் அக்கறைப்பற்று பிரதேச பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கெடுத்து தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டனர். மக்கள் இந்த தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதில் காட்டிவரும் ஆர்வம் பாராட்டத்தக்கது என்றும் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாத ஏனையோர் அடுத்த தடவையில் பெற்றுக் கொள்ள முன்வரவேண்டும் என்றும் தவிசாளர் றாஸிக் இதன்போது தெரிவித்தார்.



அக்கரைப்பற்றில் கோவிட் 19 தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் , அக்கறைப்பற்று சுகாதார பிரிவின ரால் தடுப்பூசி மையங்களாய் அடையாளப்படுத்தப்பட்ட ஆயிஷா பாலிகா மகாவித்தியாலயம் (தேசிய பாடசாலை) , முஸ்லிம் மத்திய கல் லூரி (தேசிய பாடசாலை) போன்ற இடங்களிலும் தடுப்பூசிகள் வழங் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜூடோவில் தங்கம் வென்று அசத்திய கொசோவா அடுத்தடுத்த ஒலிம்பிக்கில் சாதனை



டோக்கியோ ஒலிம்பிக்கில் ஜூடோ 48 கிலோ எடைப்பிரிவுப் போட்டியில் ஜப்பான் வீராங்கனையைத் தோற்கடித்து தங்கம் வென்றுள்ளார் கொசவோ நாட்டைச் சேர்ந்த டிஸ்ரியா க்ரஸ்னிக் (Distria Krasniqi). உலக அரங்கில் தன் நாட்டின் தேசியக் கொடி உயரப்பறந்ததைக் கண்டு அவர் ஆனந்தக்கண்ணீர் வடித்தார். சிறிய நாடான கொசவோ செர்பியாவுக்கு அருகில் இருக்கிறது. செர்பியாவின் ஆளுகைக்கு கீழ் இருந்த இந்த நாடு 2008 ஆம் ஆண்டு சுதந்திரக் காற்றைச் சுவாசித்தது. ரஷ்யா, செர்பியா உள்ளிட்ட நாடுகள் கொசவோவை ஒருநாடாக அங்கீகரிக்க இன்றளவும் மறுக்கின்றன. சுதந்திரம் அடைந்து 13 ஆண்டுகளே ஆனபோதிலும் ஒலிம்பிக் போட்டிகளில் இது கொசவோவுக்கு இரண்டாவது தங்கமாகும். எத்தனையோ நாடுகள் ஒலிம்பிக்கில் பங்கேற்று பதக்கம் வாங்காமல் வெறும் கையோடு திரும்பும் சூழலில் கொசவோ நாட்டு வீராங்கனைகள் அடுத்தடுத்த ஒலிம்பிக் போட்டிகளில் தங்கத்தை வென்று அந்நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

க்ரஸ்னிக்கின் வெற்றியை ஒட்டு மொத்த கொசவோவும் கொண்டாடிவருகிறது. அயல் நாடான அல்பெனியாவும் அவரது வெற்றியைக் கொண்டாடியது. 2016 இல் நடந்த ரியோ ஒலிம்பிக்கில் முதன்முதலில் கொசவோ நாடு பங்கேற்றது. ஜூடோ 52 கிலோ எடைப்பிரிவில் மஜ்லின்டா கெல்மென்டி, கொசவோ நாட்டுக்காக முதல் தங்கப்பதக்கத்தை வென்று கொடுத்தார். இப்போது டோக்கியோவவில் க்ரஸ்னிக் தங்கம் வென்றுள்ளார்.

க்ராஸ்னிக்கின் பயிற்சியாளர் ட்ரைடன்குகாபேசுகையில், டிஸ்ரியா பதக்கம் வெல்வார் என்ற நம்பிக்கை இருந்தது. அவர் தங்கப்பதக்கம் வென்றது உண்மையில் மிகப்பெரியது. இரண்டு ஒலிம்பிக் போட்டிகளில் இரண்டு தங்கப்பதக்கம் வென்றது என்பது விளையாட்டில் சிறந்த ஒன்று என்று தெரிவித்திருக்கிறார்.

இந்த வெற்றி குறித்து பேசிய டிஸ்ரியா க்ரஸ்னிக், இந்தப் பதக்கத்தை எனது நாட்டிற்கும் குடும்பத்துக்கும் என்னை ஆதரித்த அனைவருக்கும் அர்ப்பணிக்கிறேன். ஜப்பானியருக்கு எதிரான இந்தப்போட்டி மிகவும் கடினமான போராட்டமாக இருந்தது. ஏனெனில் ஜப்பான் ஜூடோவில் சிறந்து விளங்கும் நாடு என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## ஒருநாள் கிரிக்கெட் தொடர் வென்றது ஆஸ்திரேலியா



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியில், ஆஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை, ஆஸ்திரேலிய அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

பார்படோஸில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 45.1 ஓவர்களில் சகலவிக்கெட்டுகளையும் இழந்து 152 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. எவின் லூயிஸ் ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களையும் டரன் பிராவோ 18 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆஸ்திரேலிய அணியின் மிட்செல் ஸ்ட்ராக் 3 விக்கெட்டுகளையும் ஹசல்வுட், ஆகர் மற்றும் ஸம்பா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து 153 என்ற என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, 30.3 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கைக்கடந்து 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. மத்யு வேட் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களையும் அலெக்ஸ் கெரி 35 ஓட்டங்களையும் எடுத்தனர். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் செல்டொன் கோட்ரல், அகீல் ஹொசெய்ன், அல்சார்ரி ஜோசப், ஹெய்டன் வோல்ஷ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக அஸ்டன் ஆகரும் தொடரின் நாயகனாக மிட்செல் ஸ்ட்ராக்கும் தெரிவுசெய்யப்பட்டனர்.



## ஒலிம்பிக் மகளிர் டென்னிஸ் நவோமி ஒசாகா அதிர்ச்சி தோல்வி

டோக்கியோ ஒலிம்பிக் மகளிர் ஒற்றையர் பிரிவு டென்னிஸ் போட்டியில் உலகின் தர வரிசையில் இரண்டாமிடத்திலுள்ள வீராங்கனையான நவோமி ஒசாகா அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

ஒலிம்பிக் மகளிர் ஒற்றையர் பிரிவுக்கான 3 ஆவது சுற்று டென்னிஸ் போட்டி இன்று நடைபெற்றது. இதில் நவோமி ஒசாகா மற்றும் செக் குடியரசின் மார்கெட்டா ஆகியோர் மோதினர். இதில் மார்கெட்டா சிறப்பாக விளையாடி 6-1, 6-4 என்ற நேர் செட் கணக்கில் நவோமி ஒசாகாவை வீழ்த்தி அதிர்ச்சியளித்தார். இதனையடுத்து காலிறுதிப் போட்டிக்கு மார்கெட்டா தகுதி பெற்றார். ஒலிம்பிக்கில் பங்கேற்று தங்கம் வெல்ல வேண்டும் என்பதற்காக அண்மையில் நடந்து முடிந்த விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில்கூட பங்கேற்காமல் இருந் தார் நவோமி ஒசாகா என்பது குறிப்பிடத்தக்கது.

## கருணாரத்னேக்கு துடுப்பு மட்டையை பரிசளித்த ஹார்திக் பாண்ட்யா



இலங்கை கிரிக்கெட் அணிக்கு எதிரான முதல் ரி-20 போட்டி நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் சிறப்பாக விளையாடிய இந்திய அணி 38 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதனையடுத்து 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்தப் போட்டியின்போது இலங்கை அணியின் சகலதுறை வீரரான சமிக கருணாரத்னேக்கு தன்னுடைய துடுப்பாட்ட மட்டையொன்றை பரிசாக வழங்கி இருக்கிறார் இந்திய அணியின் ஹார்திக் பாண்ட்யா. இந்தத் தகவலைதன்னுடைய இன்ஸ்டாவில் புகைப்படத்துடன் பகிர்ந்துள்ளார் கருணாரத்னே. அந்தப் பதிவில், என்னுடைய ரோல் மொடல் ஹார்திக் பாண்ட்யாவிடம் இருந்து துடுப்பு மட்டையைப் பரிசாகப் பெற்றதைக் கௌரவமாகக் கருதுகிறேன். அதுவும் என்னுடைய முதல் சர்வதேச ரி-20 போட்டியில் இது சாத்தியமாகியிருக்கிறது. நீங்கள் ஓர் அருமையான மனிதர். உங்களின் இந்தப் பரிசால் நான் நெகிழ்ச்சியடைந்தேன். இந்த நாளை எப்போதும் மறக்கமாட்டேன். கடவுள் உங்களை எப்போதும் ஆசிர்வதிப்பார் என்று குறிப்பிட்டிருக்கிறார் சமிக கருணாரத்னே.





## ஒலிம்பிக் நீச்சலில் தங்கம் வென்ற ஆஸ்திரேலிய வீராங்கனை ஆனந்தக் கூச்சலிட்ட பயிற்சியாளர்

ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த 20 வயது நீச்சல் வீராங்கனை அரியார்ன், ஐந்து முறை ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற அமெரிக்காவை சேர்ந்த கற்றி லெடெக்கியை பின்தள்ளி தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார். 400 மீட்டர் ப்ரீஸ்டைல் பிரிவில் இந்த வெற்றியை பதிவு செய்துள்ளார் அவர்.

அவரது வெற்றியைக் கண்டதும் அவரது பயிற்சியாளர் டீன் பொக்ஸால் கொண்டாட்டத்தில் ஈடுபட்டார். தற்போது அது தொடர்பான காணொலி பரவலாகப் பகிரப்பட்டு வருகிறது. வெற்றிக் கோட்டை அரியார்ன் நெருங்கியதும் உற்சாகத்தில் தான் அணிந்திருந்த மாஸ்க்கையும் கழற்றிவிட்டு, முஷ்டியை முறுக்கி அவர் ஆனந்தக் கூச்சலிட்டிருந்தார்.

# பொதுமக்களினால் முன்வைக்கப்படும் யோசனைகள் நடைமுறைப்படுத்தப்படும்

## நிமல் லான்சா கூறுகிறார்

அரசாங்கத்தின் 'கிராமத்துடனான உரையாடல்- வேலைத் திட்டத்துடன் மீண்டும் கிராமத்திற்கு' என்ற செயற்றிட்டத்தின் கீழ் சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாதவாறு அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இதன்கீழ் பொதுமக்களால் முன்வைக்கப்படும் யோசனைகள் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அப்பாற்படாத வகையிலும் சூழலுக்கு ஏற்புடைய விதத்திலும் நடைமுறைப் படுத்தப்படும் என்று கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் மீமுரேவில் நடைபெற்ற 'கிராமத்துடனான உரையாடல் -வேலைத்திட்டத்துடன் மீண்டும் கிராமத்திற்கு' என்ற செயற்திட்டத்தின்கீழான கலந்துரையாடலின்போது அப்பகுதி மக்களால் முன்வைக்கப்பட்ட யோசனைகைள் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் நிலையில், அவை தொடர்பில் மதிப்பீடு செய்யும் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவின் தலைமையில் மீமுரே ஆரம்ப பாடசாலையில் நடைபெற்றது.

அதன்படி ஏற்கனவே முன்வைக்கப்பட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டம் நூற்றுக்கு 85 சதவீதம் வரையில் பூர்த்தியடைந்திருப்பதாக இக்கூட்டத்தின்போது சுட்டிக்காட்டப்பட்டது.

# மாவட்டத்துக்கு மாவட்டம் எரிவாயு விலையில் மாற்றம்

சமையல் எரிவாயுவின் அதிக பட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எல். பி. ஜி. 18 லீற்றர் சமையல் எரிவாயு சிலிண்டரின் அதிகபட்ச சில்லறை விலை 1,150 ரூபா என உறுதிப்படுத்தப்பட்டு நுகர்வோர் அதிகார சபையால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இப்புதிய விற்பனை விலை கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. 18 லீற்றர் சமையல் எரிவாயு சிலிண்டரின் விற்பனை விலை மாவட்ட அடிப்படையில் வேறுபடுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய , 18 லீற்றர் (9.6 கிலோகிராம் எடை) சமையல் எரிவாயு சிலிண்டரை கொழும்பு மாவட்டத்தில் 1150 ரூபாவிலும், கம்பஹா மாவட்டத்தில் 1150 ரூபாவிற்கும் , களுத்துறை மாவட்டத்தில் 1158 ரூபாவிற்கும், புத்தளம் மாவட்டத்தில் 1174 ரூபாவிற்கும், கேகாலை மாவட்டத்தில் 1178 ரூபாவிற்கும் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை, குருநாகலை மாவட்டத்தில் 1177 ரூபாவிற்கும், காலி மாவட்டத்தில் 1181 ரூபாவிற்கும் , இரத்தினபுரி மாவட்டத்தில் 1181 ரூபாவிற்கும், கண்டி மாவட்டத்தில் 1191 ரூபாவிற்கும், மாத்தறை மாவட்டத்தில் 1194 ரூபாவிற்கும் ,மாத்தளை மாவட் டத்தில் 1195 ரூபாவிற்கும், திருகோணமலை மாவட்டத்தில் 1217 ரூபாவிற்கும், மற்றும் அநுராதபுர மாவட்டத்தில் 1215 ரூபாவிற்கும் பெற்றுக்கொள்ள முடிவதோடு, பொலன்னறுவை மாவட்டத்தில் 1215 ரூபாவிற்கும், வவுனியா மாவட்டத்தில் 1216 ரூபாவிற்கும், மன்னார் மாவட்டத்தில் 1234 ரூபாவிற்கும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1217 ரூபாவிற்கும், மொனராகலை மாவட்டத்தில் 1248 ரூபாவிற்கும், பதுளை மாவட்டத்தில் 1235 ரூபாவிற்கும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும், அம்பாறை மாவட்டத்தில் 1252 ரூபாவிற்கும், நுவரெலியா மாவட்டத்தில் 1229 ரூபாவிற்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 1250 ரூபாவிற்கும், யாழ் மாவட்டத்தில் 1259 ரூபாவிற்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 1243 ரூபாவிற்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1242 ரூபாவிற்கும் விற்பனை செய்ய முடியும் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

18 லீற்றர் அதாவது 9.6 கிலோகிராம் எடையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர் விலை தொடர்பில் நுகர்வோர் அதிகார சபை நிர்ணயித்துள்ள அதிகபட்ச விலைக்கு மாறாக சிலிண்டரை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# டயகம சிறுமி உயிரிழப்பு: 36 வாக்குமூலங்கள் பதிவு

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனுடைய இல்லத்தில் பணிக்கமர்த்தப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுமியின் மரணம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் நேற்று திங்கட்கிழமை காலை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் இது வரையில் 36 வாக்குமூலங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சரின் மனைவி, மனைவியின் தந்தை மற்றும் சிறுமியை கொழும்பிற்கு அழைத்து வந்த தரகர் உள்ளிட்ட சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், குறித்த சந்தேகநபர்களை நேற்று திங்கட்கிழமை காலை வரை தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்த நீதிமன்றம் உத் தரவிட்டிருந்ததையடுத்து நேற்று காலை குறித்த சந்தேகநபர்கள் மீண்டும் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளனர்.

# பிரித்தானிய தமிழர் பேரவையின் 38 ஆம் வருட கறுப்பு ஜூலை!

பிரித்தானிய தமிழர் பேரவை, ஆஸ்திரேலியத் தமிழ் காங்கிரஸ், பிரான்ஸ் தமிழ் ஈழ மக்களவை, அயர்லாந்து தமிழர் பேரவை, கனடியத் தமிழர் தேசிய அவை, நோர்வே ஈழத் தமிழர் அவை, நீதிக்கும் சமாதானத்துக்குமான ஒற்றுமைக் குழு - தென் ஆப்பிரிக்கா, ஐக்கிய அமெரிக்க தமிழர் நடவடிக்கை குழு ஆகிய உலகளாவிய சகோதர தமிழர் அமைப்புக்களுடன் இணைந்து வழமை போல், இந்த வருடமும் 38 ஆம் வருட கறுப்பு ஜூலை 1983 நிகழ்வை இன்று பி.ப. 6 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இணைய வழியில் நடத்த உள்ளது.

இலங்கை அரசின் தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்ட இனப்படுகொலை பல்வேறு வடிவங்களில் காலத்துக்கு காலம் அரங்கேறி வருகிறது. 1983 ஜூலையில் கொழும்பில் சுற்றுலா பயணிகள் நிறைந்திருந்ததால் அங்கு நடைபெற்ற இனப் படுகொலை கண்கண்ட சாட்சியங்கள் மூலம் வெளி உலக வெளிச்சத்துக்கு வந்தது. தமிழர்கள் படுகொலையுண்ட காட்சிகளும் சம காலத்தில் வெளி நாடுகளில் தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்பட்டன.

கடந்த மார்ச் மாதம் ஐ. நா. மனித உரிமைச் சபையின் 46 ஆவது அமர்வில் சிறிலங்கா அரசுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட பாரதூரமான தீர்மானத்தின் பின்பும் சிறிலங்கா அரசு தனது தமிழர் விரோதப் போக்கில் தளர்வைக் காட்டவில்லை. சிறிலங்காவை ஒரே இனம், ஒரே மதம், ஒரே மொழி கொண்ட சிங்கள-பௌத்த மேலாதிக்க நாடாக மாற்றும் நிகழ்ச்சி நிரலுடன் அரசு செயற்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் காரியாலயத்தின் 2015 அறிக்கையில் குற்றமிழைத்தாக அடையாளம் காட்டப்பட்டவர்கள் இன்று சிறிலங்கா அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த உயர் பதவிகளில் அதே அறிக்கையில் பெயரிடப்பட்டிருக்கும் தற்போதைய சிறிலங்கா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அமர்த்தப்பட்டுள்ளமை நெறிமுறையற்ற ஓர் அப்பட்டமான ஜனநாயக விரோத செயலாகும்.

சர்வதேச சமூகம் முன்வந்து பொருளாதாரத் தடைகள், நெறிமுறையற்ற வர்த்தகத்தை நிறுத்துவது, ஜி.பி.எஸ். பிளஸ் மற்றும் அது போன்ற சலுகைகளை நிறுத்துவது ஆகிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி ஆராயுமாறு நாம் கோரிக்கை வைக்கின்றோம். தொடரும் வன்முறை சுழற்சி, பாதிக்கப்பட்டவர் சாட்சியம், எதிர்காலத்தில் உருவாகப் போகும் அனர்த்தங்கள், வன்முறைகள் தொடர்வதற்கான மூல காரணங்கள் போன்ற காத்திரமான விடயங்கள் கலந்துரையாடப்படப் போவதுடன் முக்கியமான சர்வதேச மனித உரிமை அமைப்புகள் பங்கு பெறப் போகும் இந்த நிகழ்வில் உலகளாவிய தமிழ் மக்களையும் மனித உரிமை ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

நினைவுகூரல் நிகழ்வில் கலந்து கொள்வது உட்பட்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

Zoom - - https://tinyurl.com/BlackJuly1983
Meeting ID: 318 409 4196
Passcode: 1983

இந் நிகழ்ச்சியை பின்வரும் தளங்களினூடாகவும் பார்வையிடலாம்.:

BTF Facebook (live) - @BritishTamilsForum
BTF YouTube (live) – British Tamils Forum Channel

# போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் எதிர்வரும் நாள்களில் சுற்றிவளைப்பு

இலங்கைக்கு கடல் மார்க்கமாகவே பெருமளவில் போதைப்பொருள் கொண்டு வரப்படுவதாக தெரியவந்துள்ளது. பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினால் எதிர்வரும் நாள்களில் போதைப்பொருள் தொடர்பில் விசேட சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்படவுள்ளன எனப் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அத்தோடு கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் ஐஸ் மற்றும் ஹெரோயின் ஆகிய போதைப் பொருள்களுடன் பெண்ணொருவர் உள்ளிட்ட 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர் எனவும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -பியகம பிரதேசத்தில் 10 கிராம் ஹெரோயினுடன் 31 வயதுடைய சந்தேகநபரொருவர் கைது செய்யப் பட்டுள்ளார். குறித்த சந்தேகநபர் பயணித்த மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டுள்ளது. காத்தான்குடி பிரதேசத்தில் 86 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 50 வயதுடைய சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வேயங்கொட பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 10 கிராம் ஹெரோயினுடன் 33 வயதுடைய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை பொலிஸாரால் போதைப்பொருளுடன் தொடர்புடைய சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதே போன்று பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினால் எதிர்வரும் தினங்களில் விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஒருபுறம் போதைப்பொருள் பாவனைக்கு நபர்களை அடிமையாவதைத் தடுப்பதற்கும் மறுபுறம் இலங்கைக்கு போதைப்பொருள் கிடைக்கப் பெறுகின்ற வழிகளை இல்லாதொழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது வரையில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் இலங்கைக்கு கடல் மார்க்கமாகவே பெருமளவில் போதைப்பொருள் கொண்டு வரப்படுவதாகத் தெரியவந்துள்ளது. குறிப்பாக ஹெரோயின் போதைப்பொருள் தென் கடல் மார்க்கத்தின் ஊடாகவும் , வடக்கு கடல்மார்க்கத்தின் ஊடாக கேரள கஞ்சா கொண்டு வரப்படுவதாகவும் தெரியவந்துள்ளது. இவ்வாறு இலங்கைக்கு போதைப்பொருள் கொண்டு வரப்படுவதைத் தவிர்ப்பதற்காக ஏனைய தரப்பினருடன் இணைந்து பல சுற்றிவளைப்புக்களை முன்னெடுப்பதற்கு தயார்ப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன. பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு , விசேட அதிரடிப்படையினர் மற்றும் பிரதேச பொலிஸார் இணைந்து பரந்தளவிலான சுற்றிவளைப்புக்களில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர். -என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.07.2021இல் வெளியிடப்பெற்றது.